# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2386 - 2024 මැයි මස 22 වැනි බදාදා - 2024.05.22**

*2386 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி



| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 584 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

*மாத்தறை மாநகர சபை*

*மாத்தறை மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தின் கீழ்*
*செய்யப்படும் அறிவித்தல்*

*1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தின் கீழ் வீதிகளுக்கு பெயர் இடல், சிலுவைகள் அமைத்தல் மற்றும் நிருவகித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வீதிகளுக்கான பெயரிடல் மாத்தறை மாநகர சபையின் ஒருங்கிணைப்புக்கு ஏற்ப, வீதிகளின் பெயர்களை மாற்றுவது தொடர்பாக பின்வருமாறு தீர்மானித்துள்ளது.*

*மாத்தறை மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் 71(1) மாநகர சபை கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தின்படி வீதிகளுக்கு பெயரிடல், சிலுவைகள் அமைத்தல் மற்றும் நிர்வகித்தல் சட்டத்தின் கீழ் தென் மாகாண சபை பிரதான ஆளுநர் அவர்களினால் பெற்றுத் தந்த அனுமதியின் படி கீழே குறித்த அட்டவணையின் விபரிக்கப்பட்டவாறு, தற்போதைய பெயரில் உள்ள வீதிகளுக்கு புதிய பெயர்கள் இடப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

*நெலுமி ஏ கமகே,*
*மாநகர ஆணையாளர்,*
*மாத்தறை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*மாத்தறை,*
*2024, மே 08.*

**அட்டவணை**

| இல. | வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தார் (m) | | கொங்கிரீட் (m) | | கற்குட்டிகள் (m) | | பொரலு | |
| 1 | ஹித்டிய மெத ஶ்ரீரதனபால தேரர் மாவத்தை முதலாம் ஒழுங்கை | ஶ்ரீ ரதனபால தேரர் மாவத்தை | இல்லம் | | | | | | | 86m | 4.5 m |
| 2 | குமாரதாஸ மாவத்தை | அக்குரஸ்ஸ வீதி (ஶ்ரீ ரதனபால தேரர் மாவத்தை) | அலவேல்ல வீதி பாலத்திற்கு அருகே முன்பள்ளிக்கு முன் | | | | | | | 585 m | 6 m |

## பொலன்னறுவை பிரதேச சபை

### பொலன்னறுவை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மதிப்பீட்டு ஆதனங்கள் மீது மதிப்பீட்டு வரி விகிதாசாரத்தை அறிவித்தல்

*பொலன்னறுவை பிரதேச சபையின் அதிகாரங்களை செயற்படுத்தும் வேலைகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் எம். ஆர். டபிள்யு. சி.கே. ரனவீர ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் வாசகத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 134 ( 1 ) ஆம் துணை வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பொலன்னறுவை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மதிப்பீட்டு சொத்துக்களின் மீது 4% மதிப்பீட்டு வரியை நியமித்து அறவிடுவதற்கு வட மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

எம். ஆர். டபிள்யு. சி. கே. ரனவீர,
செயலாளர் மற்றும் அதிகாரங்கள், வேலைகள்
கடமைகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர்,
பொலன்னறுவை பிரதேச சபை,
பொலன்னறுவை.

### விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கட்டளை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் வாசகத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 134 (1) ஆம் துணை வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பொலன்னறுவை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் அமைந்துள்ள சொத்துக்களின் மீது 4% சத விகித வருடாந்த மதிப்பீட்டு வரியை நியமித்து அறவிடுவதற்கு பொலன்னறுவை பிரதேச சபையின் செயலாளர் கடமைகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர் எடுத்துள்ள தீர்மானம் அங்கீகரிக்கப்படுகின்றது.*

மஹீபால ஹேரத்,
ஆளுநர்,
விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்,
வட மத்திய மாகாண சபை,
அநுராதபுரம்.

*05 - 284*

---

## பாணந்துறை பிரதேச சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் (இடை நேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் ஆளுநரினால் கீழே காட்டப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "ஜயதிலக வீதி" என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை இங்கு அறிவிக்கின்றேன்.*

எல்.எச்.என்.எஸ். பெர்னாந்து,
பாணந்துறை பிரதேச சபையின் செயலாளர் மற்றும்
பாணந்துறை பிரதேச சபையின் விடயங்களை,
நடைமுறைப்படுத்தும் அதிகாரி,
பாணந்துறை பிரதேச சபை,
வாத்துவ.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி அமைச்சின் பெயர் : மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சு
2. உள்ளூராட்சி தாபனத்தின் பெயர் : பாணந்துறை பிரதேச சபை
3. மாவட்டம் : களுத்துறை
4. சூட்டப்பட்ட பெயர் : ஜயதிலக வீதி
5. வீதியின் விபரம் : பாணந்துறை பிரதேச சபையின், வாத்துவ உப காரியாலய அதிகாரப் பிரதேசத்தின் இலக்கம் 702/ஏ, பட்டியஎலிய, பெயருடைய கிராம அலுவலர் பிரிவின் மொறொன்துடுவ வீதியில் ஆரம்பமாகி ரத்தனசார மாவத்தை வீதியில் நிறைவடையும் 600 மீற்றர் நீள அளவினைக் கொண்ட 3.66 மீற்றர் வரை அகலத்தைக் கொண்ட வீதி

05 - 245